# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 077/2018/மா**
**ஆணை நாள்: 13–02–2020**

திரு. எம். ஈஸ்வர மூர்த்தி,
மேலப்பாளையம். – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மேலப்பாளையம் மண்டலம்,
திருநெல்வேலி மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாநகராட்சி, 473, தாய் நகர், பிளாட் எண்.3, மேலப்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஈஸ்வரமூர்த்தி என்பவரது 2.4.2018 நாளிட்ட முறையீட்டு மனு 4.04.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.077/2018 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, மேலப்பாளையம் மண்டல அலுவலரின் அறிக்கை கோரி பெறப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

திருநெல்வேலி மாநகராட்சி, 473, தாய் நகர், பிளாட் எண்.3, மேலப்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஈஸ்வர மூர்த்தி என்பவர் தனது 2.4.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் 59/85 எண்ணிட்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட வீட்டு மனைத் திட்டப் பிரிவில் பொதுப் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பலருக்கு பல லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகிவிட்டது எனத் தெரிவித்து, மேற்படி லே அவுட்

வரைபடத்தின் அளவுகளை நேரில் ஆய்வு செய்து, மாநகராட்சிக்கு approval ஆன போது எண்.59/85–ல் கொடுக்கப்பட்ட நிலத்தை மீட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்குமாறு கோரியுள்ளார். இம்முறையீட்டு மனு மீது 11.4.2018 நாளிட்ட இம்முறைமன்ற க.எண்.077/மா/2018-ல் மேலப்பாளையம் உதவி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டதில், மேலப்பாளையம் உதவி ஆணையர் தனது 26.11.2018 நாளிட்ட அறிக்கையில் மேற்படி "தாய் நகர்" மனைப் பிரிவில் பொதுபயன்பாட்டு நிலங்கள் ஆக்கிரமிப்பு குறித்த தல ஆய்வு சார் ஆய்வாளர் மற்றும் சம்மந்தப்பட்ட உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோரால் பார்வையிடப்பட்டு, மேற்படி தாய் நகர் லே அவுட்டில் பொது பயன்பாட்டுக்கென ஒதுக்கப்பட்ட 2489 சதுர மீட்டர் இடத்தில் மாநகராட்சி பூங்கா அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாகவும், மேற்படி இடம் நகரளவை ஆவணங்களில் நகரளவை வார்டு AT, பிளாக் 6, நகர புல எண்.126/4, என நகரளவை கணக்கில் உள்ள புலப்படத்தின்படி சரியாக உள்ளது என்றும், மேற்படி இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என நகரளவரின் 20.11.2018 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் முறையீட்டு மனு குறித்து திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் வார்டு அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரியும் திரு. எஸ். லெனின் 25.7.2018 அன்று இம்முறைமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். மேற்படி வாக்குமூலத்தில், மனுவில் குறிப்பிட்டுள்ள திட்ட அனுமதி எண்.59/1985-ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும், 1985-ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணை எண்.59/1985-ல் கிட்டங்கி உபயோக பகுதியினை கல்யாண மண்டபமாக மாற்றம் செய்யப்படடு தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டது என்றும், திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமத்தால் அதற்கான திட்ட அனுமதி 6/2015 எண்ணாக வழங்கப்பட்டது என்றும், ஏற்கனவே 1985-ஆம் ஆண்டு திட்ட அனுமதி வழங்கப்பட்ட நிலத்தின் நகரளவை நில எண்.126/4, என்றும், 59/1985ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மனைப் பிரிவு 70.83 சென்ட் நிலம் பொது பயன்பாட்டு திறந்த இடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இது தற்போதைய 6/2015 திட்டப் பிரிவிலும் அப்படியே உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தற்போது அந்த இடம் பொது பயன்பாட்டிற்கான பூங்காவாக உருவாக்கிட மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது என்றும், அங்கு எவ்விதமான ஆக்கிரமிப்பும் இல்லை என்றும், ரூபாய் 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபாதை மற்றும் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் 25.7.2018ல் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க கோரப்பட்டிருந்தும், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி புகாரினை

நிரூபிக்க தவறியுள்ளார். மனுதாரரின் முறையீட்டு மனு, மேலப்பாளையம் மண்டல உதவி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையரின் அறிக்கையை ஏற்று, மேல் நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/5 17.2.20

செயலாளர்

17.2.20

பெறுநர்

1. எம். ஈஸ்வர மூர்த்தி,
   **473, தாய் நகர், பிளாட் எண்.9,**
   **மேலப்பாளையம், திருநெல்வேலி.**

2. உதவி ஆணையர்,
   மேலப்பாளையம் மண்டலம்,
   திருநெல்வேலி மாநகராட்சி.

நகல்

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு 3**
**இ. கோ. / உதரி**